உ கணபதி துணை.

# வருணகுலாதித்தன்மடல்.

இஃது

திருத்தணிகைக்

கந்தப்பையர்குமாரர்

சரவணப்பெருமாளையரால்

பரிசோதித்து

இவராலும்

பொய்கைப்பாக்கம்

பழனியப்பமுதலியார்குமாரர்

அப்பாசாமிமுதலியாராலும்

பூம்பாவை

அண்ணுசாமிமுதலியார்குமாரர்

சிங்காரமுதலியார்

கேட்டுக்கொண்டபடி

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

SCANNED
SL No: 1320

---

இதன்விலை.

வெறுங்கட்டடம் - அணா ௫.

தோற்கட்டடம் - அணா ௫௨.

வீசுமதி தூணாகமேனிமெலிவித்ததுவும் - - *
வாசுகியைநாணாவருத்தியதும்-ஓசையலை - - ௩.

தன்னைக்கடைந்ததுவுந்தண்ணமுதத்தோடுதித்த - - *
மின்னைத்தழுவியதுமெண்ணாமல்-பன்னிதி - - - ௪.

திரம்பேசுங்கோவலர்பாற்சென்றுபதினாறா - - - *
யிரம்பேர்மணம்புணர்ந்தானென்றும்-பெருங்கனக - ௫.

வல்லார்க்குங்கொங்கைமடவார்முதலாய - - - *
எல்லார்க்குமாலாயினானென்றும்-சல்லாப - - - ௬.

சிந்தைதனைமற்றோர்பாற்செல்லாவசீகரிக்க - *
வந்துலகிலுற்பவித்தமாமாது-அந்தரத்தில் - - ௭.

ஓதினியமின்போலொளியாமலெப்பொழுதும் - - *
மேதினியிற்சஞ்சரிக்குமின்கொழுந்து-பூதலத்தில் - ௮.

பைந்தொடியார்கோலம்பகல்விளக்குப்போலாக - *
வந்ததொருநந்தாமணிவிளக்குச்-சந்தப் - - - ௯.

படிவமெடுத்தபசுந்தோகையோகைப் - - - *
பிடிநடையன்னத்தின்பேடை-அடிதுவக்கித் - - ௰.

தங்குங்கொழுந்தென்றுதள்ளாமலோரிடம்போல் - - *
எங்குந்தித்திக்குமிளங்கரும்பு-பொங்குவெயில் - ௰௧.

கண்டுமுகங்கருகாக்கண்டுண்ணாத்தாதுதிரா - - *
வண்டுதுவையாமதுமாலை-அண்டர்பால் - - - ௰௨.

சோராக்கலைகுறையாச்சுற்றாமுயற்களங்கம் - - *
சேராமறையாச்செழுந்திங்கள்-ஆராயும் - - - ௰௩.

மைத்தவழுந்தென்பான்மலயமலையிற்பிறவாச் - - *
சித்தசனேறாச்சிறுதென்றல்-வைத்த - - ௰௪.

உலைபுகாக்காயாவுருகாநிறக்குந் - - - *
துலைபுகாமாற்றுரையாச்சொர்ணம்-அலைகடல்சூழ் - ௰௫.

வெம்பூவின்முப்பூவிளைநிலத்தின்வீறடங்க - - *
ஐம்பூவிளையுமமிர்தநிலம்-செம்பிரத் - - ௰௬.

தார்க்குமெவர்க்குமருந்தாதிருந்தாலும் - - ✻
பார்க்கமயக்கும்பசுந்தேறல்-போர்க்குரிய - - ௰எ.

காமனுக்குவஜ்ராங்கிகாமனுக்குநிக்ஷேபம் - - ✻
காமனுக்குமோகக்கருகூலம்-காமனுக்கு - - ௰அ.

மூதண்டலோகமுழுதுஞ்செங்கோனடத்தும் - - ✻
கோதண்டதீக்ஷாகுருபீடம்-மாதவரும் - - ௰கூ.

நற்றவருநீதியநாடோறுநன்றென்று - - - ✻
கற்றகவியின்பக்கலைஞானம்-வெற்றிமதன் - ௨௰.

மீதிட்டகாமநூல்வித்தைக்கடங்காமல் - - - ✻
வாதிட்டபஞ்சவர்ணக்கிள்ளை-ஆதித்தன் - - ௨௧.

பொங்குகதிர்காணுதபூங்குமுதங்கங்குலையும் - - ✻
திங்களையுங்காணுச்செழுங்கமலம்-எங்குநில - ௨௨.

வாகநகைக்குமரம்பையரின்மேனகைக்கும் - - ✻
கோகநகைக்குங்குலதெய்வம்-பாகுமொழிப் - ௨௩.

பண்ணுநடையும்பழகுமொருசித்திரம்போல் - ✻
நண்ணுமதனரசகுளிகை-வண்ண - - - ௨௪.

நெடியதருவிற்படராநீள்வல்லிதாவிக் - - - ✻
கொடிபடராக்கற்பகப்பூங்கொம்பு-வடிவுமிகு - - ௨௫.

பெண்ணுருவமாகப் ப்ரவாளங்கிளைத்தமுதல் - - ✻
மண்ணுலகங்காக்கவருமமிர்தம்-எண்ணம் - - ௨௬.

சிறப்பிக்கமாதவத்தோர்செய்தவங்களெல்லாம் - ✻
திறப்பிக்கவந்தபெருஞ்சூழ்ச்சி-நிறைத்துப் - - ௨எ.

பெருகியுவட்டெடுத்தபேரின்பவெள்ளம் - - - ✻
பருகிற்றெவிட்டாப்பசுந்தேன்-ஒருவருக்கும் - - ௨அ.

பூணக்கிடையாதபொன்னரத்நாரத்தே - - ✻
காணப்பரிமளிக்குங்கஸ்தூரி-நீணிலத்தில் - - ௨கூ.

கொல்லாக்கொடுங்கூற்றங்கூவாமற்கொஞ்சுகுயில் - ✻
எல்லாக்கலைக்குமினியமான்-உல்லாசத் - - - ௩௰.

(அடி.)

தேமேவனிச்சச்செழும்போதெனுமினிய - - *
பூமேனடக்கப்பொருமலோ-மாமோகத் - - ௫௧.

தந்தமத நூல்கொண்டமிர்தநிலையாராயும் - - *
மைந்தரதிம துரவாய்பட்டோ-மூந்துகணைச் - - ௫௨.

செங்கைச்சிலைவேள்திருமுடியின்மேல்வைத்தோ - *
மங்கையர்தங்கையால்வருடியோ-பங்கமுற - - ௫௩.

வாட்டியவாறேனைவசீகரிக்கச்செம்பஞ்சு - - - *
தீட்டியோகோலஞ்சிவந்ததென-நாட்டம் - - ௫௪.

திகழவகஞ்சிவந்துசெம்பவளக்கொம்பும் - - - *
பகருமெழிலிந்த்ராணிபந்தும்-புகழிளைஞர் - - ௫௫.

மெத்துமதிசோர்வதற்குவிண்மதிபோதாதென்று - - *
சித்தசன்றானாய்ந்துசெய்தமதி-பத்தும் - - ௫௬.

பெரிதுவிஜயம்பெறுமதனராஜன் - - - *
சரிதநிறைபுஸ்தகமூந்தாங்கிப்-பரவியே - - - ௫௭.

ஆதிப்பிரமனனத்தைத்திருத்திநடை - - - *
சாதிப்பிக்குங்கமலத்தாளினாள்-மேதினியில் - ௫௮.

(பாடு.)

நாளைமடல்விரியுநாளிகேரத்தினிளம் - - - *
பாளைவிரியாப்பசுங்குரும்பை-தாளும் - - - ௫௯.

அவங்கள்புரியாதருந்தறவோர்செய்யும் - - *
தவங்கணிறக்குந்தராசு-தவங்கொள் - - - ௬௰.

இரண்டுதிகராகியெல்லோர்க்குமின்பம் - - *
திரண்டவெனவழகுசிந்திமருண்டமதன் - - - ௬௧.

வேதசாரங்குமூறுமின்னூபுரத்துடனே - - *
பாதசாலஞ்சூழ்பரட்டினாள்-ஆதரவின் - - ௬௨.

(கணைக்கால்.)

ஆட்சிமதராஜவிருதத்தனையுமூதாமல் - - *
காட்சியிலேபோதிக்குங்காளம்போல்-மாட்சியினை - ௬௩.

மீகார்விழிக்கயலின்மேற்பாயச்சுதொட்டி - - *
வாதாகிதிற்கும்வராலினைபோல்-ஊதுகுயிற் - - - ௬௪.

காளமதன்முதுகுகாட்டாமன்மாட்டிபெறத் - - *
தோளதனிற்கட்டுகின்றதூணிபோல்-வேளின் - - ௪௫.

பெருத்தகணைக்காலைந்தும்பின்னிடவேமைந்தர் - *
கருத்தைவருத்துகணைக்காலாள்-ஒருத்தி - - ௪௬.

(முழந்தாள்.)

அமையுமிலங்காபுரியிலன்றுசென்றதூதர் - - *
தமையுமருட்டுமுழந்தாளாள்-அமுதுபயில் - - ௪௭.

(துடை.)

அங்கவனுராகவதிமோகசாகரத்தைச் - - - *
செங்கையுறநீந்துகைக்காந்தெப்பமோ-இங்கிதமாய் - ௪௮.

மட்டுப்படாவிளைஞர்வாஞ்சைமதயானை - - *
கட்டுப்படுமிரண்டுகம்பமோ-தொட்டுமயல் - ௪௯.

நாட்டுகலவிக்கினியநாடகசாலைக்கழகு - - - *
சூட்டுமணிமுகப்பின்றூண்களோ-கோட்டிபத்தின் - ௫௰.

சுத்தத்துதிக்கையோசொல்லுவமையென்றுலகோர் - *
சித்தத்துதிக்கைசிறப்பித்து-மெய்த்திமிர - - - ௫௧.

வாரணவேளோலக்கமால்வசந்தமண்டபஞ்சேர் - *
தோரணவாழைத்துடையினாள்-தாரணியில் - ௫௨.

(அல்குல்.)

ஆலிக்குவில்வேளமளியிலேயிவ்வுலகில் - - - - *
பாலிக்குமிந்த்ரபதமென்னச்-சீலிக்கும் - - — ௫௩.

புந்திக்குமாலுதவும்போர்மாரன்பொக்ஷமென - - -*
வந்திக்கும்பொன்னூலவட்டமெனச்-சித்தித்துச் - ௫௪.

சூழுமணிதாங்கித்துலங்குகுறங்காமிரண்டு - - *
வாழையிடைச்செத்தேனைவைத்ததென-வேழமதன் ௫௫.

காமித்ததென்றல்கரக்கினுறக்காரிகையார் - - *
சேமித்தலங்கரித்ததேரென்னப்-பூமிக்குள் - ௫௬.

வண்மைமதனூலொழியமற்றுளநூல்பொய்யெனவே - *
உண்மைவிளக்குமுருவமாய்த்-திண்மைபுனை - ௫௭.

மாரனரசொழியமற்றோரரசில்லையென் - - *
றூரமயல்பூட்டுமரசிலையாய்-ஈரம் - - - ௫௮.

தயங்கியமிர்தந்த தும்பியிதமுற்று - - - - *
வயங்குபொறிப்லைபந்நாகமாகி-நயங்குலவி - ௫௯.

ஓசைமணிமேகலையினுட்கலையினெஞ்ஞான்றும் - *
ஆசைபரிமளிக்குமல்குலாள்-நசர் - - ௬௰.

(இடை.)

துடியாய்ப்பிடியாய்ச்சுருதியாய்வல்லிக் - - *
கொடியாயிளவஞ்சிக்கொம்பாய்-வடிவடங்கப் - ௬௧.

பண்ணிச்சமைத்தவயன்பாதாதிகேசமெல்லாம் - *
கண்ணெச்சிலென்றேகழித்ததென-வண்ணமலர்த் ௬௨.

தேமருவுமல்குலெனுந்தென்றற்செழுந்தேரில் - - *
மாமதனனின்றவட்டமென-நாமருவு - - ௬௩.

மாதுவிளையாடுமுதுவாய்ப்புலவர்சொற்பயன்போல் - *
ஈதுதெரியுந்தெரியாதென்னலாய்-ஓதறிவிற் - ௬௪.

பண்டைமொழியிற்குறித்தபாதகரோபோலெவரும் - - *
உண்டில்லையென்னுமுணாக்கிசைந்து-மண்டலத்தில் ௬௫.

மாத்தானைக்காத்தான்வருணகுலாதித்தனைச்சென் - - *
றேத்தார்போற்றேய்ந்தவிடையினுள்-நீத்துச் - ௬௬.

(உந்தி.)

செழித்துவாழில்லறத்தைத்தீதென்பார்நெஞ்சைச் - - *
சுழித்துவாங்குந்திச்சுழியாள்-விழித்தெதிரோ - ௬௭.

(வயிற்றுமயிரொழுங்கு.)

உற்றமால்பூட்டுமுதரவடபத்திரத்தில் - - - *
கொற்றமால்பள்ளிகொண்டகோலமோ-வெற்றிமதன். ௬௮.

செங்கைச்சிலைநாணோசெங்கோலோகொங்கையெனுந் - *
துங்கக்களிற்றின்றுதிக்கையோ-குங்குமஞ்சேர் - ௬௯.

பொற்புழையாமிரட்டைப்புண்டரிகப்போதரும்பி - *
நற்புதுமைகாட்டுமொருநாளுமோ-அற்புதவேள் - ௭௰.

ஆர்க்குந்திருநாளுக்கல்குற்றேர்பின்னேட்டம் - *
பார்க்கப்பிணித்தபணிவடமோ-நீர்க்குமிழி - ௭௧.

ஏந்துமிருகொங்கையிளநீர்கலந்தணிந்த - - - *
சாந்துபுழுகொழுகுந்தாரையோ-மாந்தர்மருள் - ௭௨.

உச்சாயமாமிடைக்குமோங்குபயமாமுலைக்கும் - *
அச்சாய்நிறுத்தியநாராசமோ-கச்சாரம் - - ௭௩.

வன்னஞ்சிறந்தமுலைமால்வரையின்மாதவத்தோர் - - *
தந்நெஞ்சையேற்றுமொருசாரமோ-கன்னிப் - ௭௪.

புளகவபிராமப்பொருவருகெம்பீரக் - - *
களபமுலைச்செவ்விளநீர்க்காம்போ-வளமையினால் - ௭௫.

எண்ணிரண்டுகொங்கைக்கிடைவெளியைநோக்குகின்ற *
கண்ணிரண்டின்பத்திக்கதிரொழுங்கோ-எண்ணியெண்ணிட்.

பார்க்கும்பொழுதிற்பலகோடிசொல்லுவமைக் - *
கேற்குஞ்சிறுரோமரேகையாள்-நீர்க்கயத்துச் - -௭௭.

(முலை.)

சீதவனசத்தரும்பைச்செப்பலாமவ்வரும்பு - - *
ஆதவனைக்கண்டாலலருமே-சூதாடு - - ௭௮.

வட்டென்றுவமைமதிக்கலாம்வட்டதனை - - *
வெட்டென்றுசொல்லவிதியுண்டே-நெட்டுடலச் ௭௯.

சக்ரவாகத்தைச்சரியுரைக்கலாமதுவும் - - - *
மிக்கசிறகுடைத்தாய்விட்டதே-ஒக்குமெனப் - ௮௦.

பாரப்பருவதலப்பச்சிளநீரென்னலாம் - - - *
ஆரப்புளகமரும்பாதே-வீரமதன் - - - ௮௧.

வண்ணமுடியென்றுமதிக்கலாமம்மகுடம் - - *
தண்ணெனவும்வெச்சனவுந்தாராதே-பண்ணரிய - ௮௨.

சித்ரமணிச்செப்பென்றுசெப்பலாமச்செப்பு - - *
புத்தமிர்தபோகம்பொசியாதே-சுத்தநதிச் - ௮௩.

சுந்தரஞ்சேர்புற்புதத்தைச்சொன்னாற்பனிநீரும் - *
சந்தனமுங்குங்குமமுந்தாங்காதே-வித்தைசெறி - ௮௪,

அர்த்தநறுங்கோங்கினரும்பெனலாமவ்வரும்புக் - *
கிந்தமுகக்கருமையெய்தாதே-சந்தமிகும் - ௮௫.

பூரணகும்பங்களெனப்போற்றவாமக்கும்பம் - *
தாரணியுமொண்சுணங்குந்தாராதே-சேரணியும் - ௮௬.

மாகனகவெற்பெனலாமற்றந்தவெற்பரனார் - - *
கோகனகக்கையாற்குனித்ததே-வாகுசெறி - - ௮௭.

பந்திணைகளென்றுபகரலாமப்பந்தும் - - *
இந்துநுதலார்கைக்கிடைந்தெழுமே-கந்தமிகும் - ௮௮.

பூங்கொத்திணையாப்புகலலாம்பூங்கொத்தும் - *
தேங்குதென்றல்வீசச்சிதறுமே-மாங்கனியின் - ௮௯.

பக்குவமாமென்றுபகரலாமக்கனியும் - - *
மிக்ககிளிகோதியிடின்வீழுதே-தக்கபெரு - ௯௰.

வாகுமதயானையிருமஸ்தகமென்றோதலாம் - - *
பாகர்சிறுகொந்தாற்பயந்ததே-ஆகையினால் - ௯௧.

வானேமுதலிந்தமண்டலத்தினேரின்றித் - - *
தானேதனக்குச்சரியாகி-ஞானமெல்லாம் - - ௯௨.

மொண்டெடுத்தமௌனமுனிக்குறும்பெலாமடக்கத் - *
தண்டெடுத்துவந்ததனுமாரன்-கொண்டலெனும் - ௯௩.

மட்டவிழும்பூங்கோதைமாதரிக்குந்தனக்கும் - *
இட்டவிணைக்கூடாரமென்னலாய்-வட்டத் - - ௯௪.

திடங்கொண்டுபூரித்திறுமாந்துமுத்து - - - *
வடங்கொண்டுமின்மேல்வளர்ந்து-தடங்கொண்ட - ௯௫.

வட்டவிருமந்தரத்தைமார்பிற்பதித்திறுகக் - - *
கட்டுமணியாணிபோற்கண்கறுத்துக்-கிட்டரிய - ௯௬.

பாளிதவேலப்படீரமுலாவுப " - - *
லாளிதமோகனராஜசம்-மேளம - - - ௯௭.

னோகாகாமவினோதவிகாரவ - - - *
சீகரகோமளசீதள-மாகி - - - ௯௮.

அரும்பிவிரும்பியசைந்துதசைந்து - - - - *
திரம்பிநெருங்கிநெகிழ்ந்து-பார்த்து - - ௯௯.

சுணங்குநிலைறந்துசுகந்தகதம்ப - - - *
மணங்குடிகொண்டுவயங்கி-இணங்கி - - - ௱.

அருந்தவர்சிந்தையடங்கிமடங்கி - - - *
வருந்தநெருங்கிவளர்ந்து-திருந்தியொரு - - ௱௧

தீதுங்கொள்ளாதசெழுந்தாமரைமுகையின் - - *
மோதுஞ்சிறுதிவலைமொய்த்தனபோல்-ஓதமரர் - - ௱௨

வாழக்கடல்கடைந்தமாயோன்மணிமகுடம் - - *
சூழத்தெறித்தசுதைத்துளிபோல்-ஏழுலகும் - ௱௩.

மெச்சுகலைமதியின்வெண்ணிலாவீசுமுத்தின் - - *
கச்சுப்புனைந்தகனதனத்தாள்-இச்சையினால் - ௱௪.
(கைவிரல்)

ஏத்துகின்றகாமுகர்மேலின்பவெண்முத்திரையைச் - *
சாத்துகின்றமுத்திரைக்கோராணென்னச்-சூத்திரங்கள் ௱௫.

டாயிலொருவரறியாவுயிர்தநிலைக் - - - *
கோயிறிறக்குந்திறவுகோலென்னத்-தூயகலை - - ௱௬.

வாசிக்கும்பஞ்சவனக்கிள்ளையின்சிவந்த - - *
நாசிக்குநேராய்நகந்துலங்கத்-தேசுற்ற - ௱௭.

பத்ரகரவீரபத்திரமோகோமளஞ்சேர் - - *
சித்ரப்பருவச்சினைக்கெளிதோ-மெத்தென்று - ௱௮

துய்யபவளத்துவடருகொம்போவென்ன - - - *
வெய்யமயல்பூட்டும்விரலினாள்-செய்யசெழுந் - - ௱௯.
(உள்ளங்கை.)

தாமரையின்போதைச்சலப்படுத்திக்காந்தளெனும் - - *
மாமலரைத்தூரவனத்தகற்றிக்-காமுகர்மேல் - - ௱௰.

வெங்கடுங்கோபத்துடனேவீசிப்புடைத்தாலும் - *
செங்கழுநீர்ப்பந்தொத்துச்சீதளமாய்-இங்கிதத்து - ௱௰௧.

மோகம்பூரிக்கமுடிதுவக்கித்தாளளவும் - - *
ஆகம்பூரிக்குமகங்கையாள்-ஒகையிசை - - ௱௰௨.

(முன்னங்கை.)

விண்டிருக்கும்யாழ்களெல்லாம்வெட்கத்திருவுருவம் - *
கொண்டிருக்கும்யாழினியகோடொத்து-வண்டணிந்து ௱௰௩

சுற்றுநவரத்நந்துலங்குகடகங்களினால் - - - *
மொய்த்தழகுமாருதமுன்கையாள்-சித்ரமுலை - ௱௰௪.

(தோள்.)

பூரணகும்பங்களின்மேற்போட்டபெருமாலையென்ன - *
ஆரணிவில்வேள்பஞ்சணையென்னச்-சீரணிந்து - ௱௰௫.

கொங்கைமலைமேலங்குரித்தெழுந்துகீழ்வளைந்த - - *
துங்கமணிவேய்போலுந்தோளினாள்-திங்கட் - - ௱௰௬.

(கழுத்து.)

சுமுகமதராஜன்சுருதியிருதாலாம் - - *
குமுகுமெனும்புள்ளோசைகொஞ்சத்-தமரிக்கும் - ௱௰௭.

வன்னிக்கும்பாளைமடலவிழநாள்செல்லும் - - *
கன்னிக்கமுகனையகந்தரத்தாள்-துன்னிரவி - - ௱௰௮.

(முகம்.)

வந்தால்விகசிதமாய்வண்டின்பதந்துவையாச் - - *
செந்தாமரைபோற்றிருமுகத்தாள்—நந்தாத - - ௱௰௯.

(உதடு.)

மாபவளமோவிலவோமாதளையோவேல்விழியின் - - *
கோபவளமோயிந்த்ரகோபமோ-சேவைதரும் - ௱௨௰.

தூதளையோகிஞ்சுகமோதொண்டையோவண்டினங்கள் - *
தாதளையுஞ்செங்குமுதத்தண்மலரோ-ஈதென் - - ௱௨௧.

றெவருமுபமானமெடுத்துரைக்கநன்மா - - *
தவருமயங்கித்தயங்கக்-குவிபொன் - - - ௱௨௨.

பொழிந்தருளுந்தென்னுசைப்பூபதியைப்போற்றும் - *
செழுந்தமிழேபோற்செம்மைசேர்ந்து-தொழுந்திருமால்

இன்னமொருகாவிருகைவருந்தாமல் - - - *
வன்னமதியமழுங்காமல்-இன்னமிர்தம் - - ௱௨௪

ஆனவுததியலையாமல்வானவரும் - - - - *
தானவரும்வெம்போர்சருவாமல்-நானிலமேல் - ௱௨௫.

வாசுகியுமந்தரமுமாயாமலமாறாமல் - - - *
ஆசையமுதாமதரத்தாள் - வீசுகதிர் - - ௱௨௬.

(நகை.)

முத்தாகித்தோகைமுருந்தாகிமுல்லைமுகைக் - - *
கொத்தாகித்தந்தக்குருத்தரும்பி - விஸ்தாரம் - ௱௨௭.

வாய்த்தபத்மராகமணியைத்தரம்பிரித்துத் - - *
தேய்த்தொப்பமிட்டுவைத்தசேர்வையெனக் - கோத்தப் ௱௨௮.

பொருதிருபவேள்சிலையிற்பூங்காவியென்ன - - *
இருதினையும்பூங்காவியேறி - உருகிமனம் - ௱௨௯.

பூணநகைக்கும்புகழ்க்கொல்லியம்பாவை - - *
நாணநகைக்குநகையினுள் - காணவெதிர் - ௱௩௰.

(சொல்.)

தீட்டிவைத்தசித்திரத்தைச்சிங்காரமோகனக்கூத் - *
தாட்டுகிற்குஞ்செஞ்சொலமிர்தத்தாள் - தோட்டிலயன்௱௩௧.

(கபோலம்.)

மண்ணுடர்விண்ணுடர்வந்தழகுபார்க்கவைத்த - *
கண்ணாடிபோலுங்கபோலத்தாள் - வண்ணவெழில் - ௱௩௨.

(மூக்கு.)

கொள்ளுங்குமிழுங்குமிழம்பாவிறம்படைத்தால் - *
எள்ளுஞ்சரியாமிதற்கென்னத் - தள்ளிச் - ௱௩௩.

சரமஞ்சரிவிடுத்தகண்ணம்பழித்த - - - *
அருமந்தசேவகனுமஞ்சப் - பெருமணத்திற் - - ௱௩௪.

காமோதவண்டின்கணத்துக்களந்தநிபா - - *
ஆமோதவல்லபமுண்டாக்கிவைத்துப் - பூமேவு - ௱௩௫.

வித்காமன்றேரோடும்வீதியெனச்சத்தசமும் - - - *
நற்கால்வழங்குகின்றதாகியாள் - பொற்கோதை - ௱௩௬.

(செவிகள்.)

தேன்போதணியுஞ்செழுங்காவிக்கண்களெனும் - - *
மான்போய்வரவிட்டவாயில்போல் - தாம்போதத் - ௱௩௭.

தாவப்பொன்னூலிரித்தால்விழிக்கூற்றம் - - *
வாவப்பிடிக்கும்வலயம்போல் - பூவுலகென் - ௱௩௮.

சுத்தமுழுமாணிக்கத்தோடணிந்தாளிலவிழி - - ❊
யத்தியிருபாலுநிக்குமாதவன்போல்-பத்திதரும் - ௱௩௯.

வைபத்தாளத்தோடணிந்தாற்பார்வைச்சகோரங்கள் - -❊
வத்தமுதமுண்ணுமதியம்போல்-முந்தமே - -௱௪௰.

சாலவழகுததம்பிலமித்தொழுகும் - - - ❊
கோலமகரக்குழைச்செவியாள்-ஆல்வடி - - ௱௪௧.

(கண்கள்.)

வேல்போனிறம்படைத்தவீரவாள்போலிரண்டு - - ❊
சேல்போற்கயல்போற்றிசைபரந்து-மால்போலச் - ௱௪௨.

சஞ்சரிகம்போலத்தயங்கிக்கடல்போல - - - -❊
நஞ்சுமமுதுநயந்தருளிக்-கஞ்சமெனச் - - ௱௪௩.

செங்குவளையென்னச்சிறந்தகருவிளையின் - - ❊
பொங்குமலரெனவேபொற்பெய்திக்-கங்குலிபக் - ௱௪௪.

கோலாகலவேள்கோலைப்பஞ்சபாணமெனக் - - - ❊
கேலாவிராக்கினியெழுப்பி-மேலான - -௱௪௫.

தேமாவடுவகிர்போற்செவ்விக்குறிபொங்கி - - ❊
மாமாரனென்னமதத்தோடிப்-பூமாதின் - - ௱௪௬.

ஆதியரிபோலரன்போலயன்போலச் - - - ❊
சோதிகரந்தவெளுத்துச்சிவந்து-பாதகமும் - ௱௪௭.

மாயமும்பொய்மையும்வஞ்சகமுந்தஞ்சமிகு - - ❊
தேயமுங்குதிரைவுருக்கு-பாயமும் - ௱௪௮.

அத்திரமும்வீரமதிக்கிரமுமுங்களவும் - - ❊
குத்திரமும்போதக்குடிகொண்டு-நித்தமிகல் - - ௱௪௯.

வாதையடர்த்துவரிபரந்துமையெழுதிக் - - ❊
காதையடைந்துகடைசிவந்தே-ஓதுகலை - ௱௫௰.

கற்றவரையெல்லாங்கருத்தழுக்கிக்காமரசம் - - - ❊
உற்றவலங்காரமுட்கொண்டு-சுற்றம் - - ௱௫௧.

புவிக்குணிகரற்றபுலவோர்தஞ்செஞ்சொற் - - ❊
கவிக்குநிகராகுமிருகண்ணுள்-குவித்தமலர் - -௱௫௨.

(புருவம்.)

சூழளகக்கொண்டலுக்குஞ்சோதிநுதற்பிறைக்கும் - *
தாழவொளிருமிந்த்ரசாபமோ-ஆழிவரு - ௱௰௩.

காளமனையகலகச்சங்க்ராமவிழி - - - - *
வாளினுறைகழற்றிவைத்ததோ-வாள - - ௱௰௪.

நெருங்குகடலும்புலம்பநீலநிறப்பார்வைக் - - *
கருங்கடலுக்கிட்டகரையோ-பெருங்கபடக் - - ௱௰௫.

காமனயிலுங்கயலும்பொருநயனத் - - - *
தாமரையின்பக்கத்தரங்கமோ-மாமதனைச் - ௱௰௬.

சித்திரமோகாதிசயஞ்செய்விக்குமாறனிம்ப - - *
பத்திரமோவென்னும்படிவிளங்கிப்-புத்திதனை - ௱௰௭.

வாட்டுசிலைவீரமதவேண்மலரம்பு - - - - *
பூட்டுசிலைபோலும்புருவத்தாள்-தோட்டிதழிக் - - ௱௰௮.

(நெற்றி.)

கொந்தார்சடையோன்குலவுநுதற்கண்போலச் - *
சிந்தூரந்தீட்டுந்திருநுதலாள்-அந்தரத்தில் - ௱௰௯.

(கூந்தல்.)

ஓட்டமிடுந்திண்டேருதயமார்த்தாண்டன்மேல் - *
கூட்டமிடுங்கங்குற்குழாங்கொலோ-நாட்டமுறத் - ௱௨௰.

தேசுபுனைபங்கயமேற்சேர்மதுகரத்திரளோ - - *
வீசுமுகமதிதோய்மேகமோ-ஆசைமதன் - - ௱௨௰௧.

காவணமோகொன்றைக்கருங்கனியோகாயாவின் - *
பூவணமோமஞ்ஞைபயில்பூங்காவோ-தாவுதமிழ் - ௱௨௰௨.

கல்லார்மனமோகலவிவிலைவாங்க - - - *
வல்லார்பொதுமகளிர்வன்னெஞ்சோ-எல்லாரும் - ௱௨௰௩.

ஏதென்றதிசயிக்கவிந்த்ரநீலத்தினறுந் - - - *
தாதொன்றிவாசச்சவாதணிந்து-போதொன்றி - ௱௨௰௪.

நெய்த்துக்கடைகுழன்றுநீண்டுசுருண்டடர்ந்து - - - *
மைத்துத்தகாமணம்பொதிந்து-மெய்த்துமணம் ௱௨௰௫.

சோதிக்கும்வண்டுஞ்சுரும்புமாடிப்பாடிச் *
சாதிக்குநாடகசாலையோ-ஓதத் ௨௬௬.

துனிநீரலைபோற்றுறவோரலையப் *
பனிநீரால்வாசம்பரவித்-தனியே ௨௬௭

வெறும்புகையுநெட்டுயிர்ப்புமெயிளைஞர்கொள்ள *
நறும்புகையுஞ்சாத்துநயந்து-நிறம்புதிய ௨௬௮.

பைந்தளவுமல்லிகையும்பன்னீரும்பாரித்தால் *
கந்தரத்திற்றாராகணம்போன்றும்-சந்தமடற் ௨௬௯.

றண்காலுஞ்செங்கமலஞ்சாத்தினான்மாயவனார் *
கண்கான்முகக்கனிவாய்கைபோன்றும்-திண்காதல் ௨௭௰.

கைவண்குருவேர்கலந்தால்வரியறல்சூழ் *
சைவலத்தின்கொத்துத்தனைப்போன்றும்-இவ்வகையே ௨௭௧.

வேரிச்செழுமலரும்வில்வேள்கணைமலரும் *
வாரிச்சொருகுமலர்க்குழலாள்-தாரணியில் ௨௭௨.

(வடிவு.)

சாதுரியவேதாவுந்தார்குழலாளைப்படைக்க *
மாதுரியம்பார்க்கும்வடிவினாள்-ஆதரிக்கும் ௨௭௩.

(தன்மை.)

மையன்மதவேள்வளநகரிசோதனைக்கோர் *
தையலுருவாகிவந்ததன்மையாள்-துய்ய ௨௭௪.

(மலை)

தொடருமழைமேகந்தோய்தலாற்சூழப் *
புடவிதனைச்சுற்றும்பொருளால்-படரும் ௨௭௫.

தளவநகைப்பாவைதரலான்மதிக்க *
அளவுபடாதவதனால்-கிளருமெழில் ௨௭௬.

அம்புலிதோற்றத்தாலமைதருநீலப்பரப்பால் *
விம்பமணிக்குன்றுபலமேவலால்-உம்பரின்மேல் ௨௭௭.

தேங்குவசிகரத்தாற்றிண்கோட்டுநாகமே *
தாங்குதலான்மாலைத்தரிக்கையால்-ஓங்கி ௨௭௮.

வரங்குலவுநேமிமகாலயம்போல் - - - *
விரங்குமுனிவன்விதித்த-வரங்கொள் - - ௱௭௯.

தமிழின்சுவையெனவேதண்குறிஞ்சிச்செந்தேன் - - - *
உமிழும்பவரமலையுள்ளோன்-கமழும் - - - ௱௮௰.

(நதி.)

செழுங்கடுக்கைத்தாராளன்செஞ்சடைபோன்மின்னி - *
முழங்கித்திசையனைத்துமூடி-ஒழுங்கிக் - - ௱௮௧

கடனீர்பருகிக்கனமுகடேறித் - - - *
திடநீடுகுன்றச்சிகரத்-தடனீடு - - - ௱௮௨.

மேகத்திரள்கால்விழுந்துபொழியமண்ணும் - - *
மாகமுமொன்றாகவரர்வெள்ளம்-மோகமலர் - - ௱௮௩.

மானைப்புணரும்வருணகுலாதித்தன்மகிழ் - - *
சேனைப்பெருக்கமெனத்திகழ்ந்து-கானில் - ௱௮௪.

விசைகொண்டுகாலெடுத்துவீசிநடந்தோடித் - - *
திசைகொண்டுகொம்பிரஞ்செய்து-மிசையுந்தித் - ௱௮௫.

தண்குறிஞ்சிவந்தடைந்துசம்பகம்பிடுங்கிவண்டு - - *
பண்குறிஞ்சிநந்துகொந்துபந்தரைந்து-திண்குறிஞ்சி ௱௮௬.

சந்தனங்களைந்துமந்திதந்திசிங்கமெண்கினங்கள் - *
உந்தியொன்றொடொன்றெதிர்ந்துடைந்தமிழ்ந்த - வந்திரா
[ந்து. ௱௮௭.

விண்டுமண்டுவிண்டடர்ந்துவிண்டொடர்ந்தகுன்றடைந்து *
கொண்டுநின்றகுங்குமங்கொணர்ந்தெழுந்து-மிண்டுகின்ற *

தந்ததொந்தமென்றுசந்தநங்கழங்குகொண்டமைந்த - *
அந்தவண்டலெங்குமொண்டடர்ந்துசென்று-முந்தி. ௱௮௮.

விளைந்தகருந்தினைசெந்தினைவிஞ்சி - - - *
வளைந்தபுனங்களைமண்டி-அளைந்து - - ௱௯௰.

வருந்தமனக்குறமங்கையரொன்றி - - - *
இருந்தவிதண்களைநீந்து-திரம்பிய - - ௱௯௧.

குங்கிலியமுந்திமிசுங்கொண்டோங்கிக்கேகயமும் - *
பைங்கிளியுமோடப்பரந்தோடித்-துங்கமுறத் - ௱௯௨.

தாங்குமயில்படைத்ததாடாளனைக்கரத்தில் - - *
ஓங்குமயில்படைத்தவுத்தமனைப்-பூங்கடப்ப - ௱௯௩.

மாலையனைவண்டாமரைமாடபீடத்தின் - - *
மேலயனைக்காவல்விளைத்தானைக்-கோலமதி - ௱௯௪.

யாறுமுகத்தானையசுரகுலயமழியத் - - - *
தூறுமுகத்தானைதொலைத்தானை-வீறுமலர் - ௱௯௫.

வேரிப்பதாம்புயனைமென்குறத்திகொங்கைபடப் - *
பூரிப்பதாம்புயனைப்புண்ணியனைச்-சீருற்ற - ௱௯௬.

கந்தனைச்சேயைக்கடவுளைச்செவ்வேளையரன் - *
மைந்தனைக்கண்டுமனமகிழ்ந்து-முந்தியெதிர் - ௱௯௭.

பாலைவனமேவியதிபாதகவில்வேடரணி - - *
வேலைவடிவாளையலைமேலுதறி-ஓலமிடு - ௱௯௮.

கூபமுறைநீரினொடுகூடிவிளையாடியதி - - *
தாபவனமேவியழல்சாடிநிறை-மாபுறவின் - ௱௯௯.

கூடுகளைக்காரகிலைக்கோலமுருடானகள்ளிக் - *
காடுகளைச்சாய்த்திருப்பைக்கானணுகி-நீடுவிறற் - ௨௱.

பாராளரைப்போற்பகற்சூறையாடுவார் - - *
போராடலெல்லாம்புறங்கண்டு-சீராகி - - ௨௱௧.

அந்தரிபிங்கலையம்பிகைசங்கரி - - - - *
சுந்தரிவித்தைசுமங்கலை-மந்தர - - - ௨௱௨.

பாரபடீரபயோதரிபூதரி - - - - *
காரணிவாமினிகாமினி-தீரி - - - ௨௱௩.

அமலைநிமலையரிவைதெரிவை - - - - *
கமலசரணிகவுரி-குமரி - - - - ௨௱௪.

வராகிகபாலிமனோன்மனிசூலி - - - - *
புராணிசடாதரிபூவை-தராதலத்தோர் - - ௨௱௫.

பன்னியடிவணங்கும்பாலைக்கிழத்தியெனுங் - - *
கன்னிதழுவக்களிகூர்ந்து-நன்னிலமெண் - ௨௱௬.

முல்லைபுகுந்துமுருகுபெருகுநெடுங் - - - *
குல்லையணிந்துகுழலேந்தி-எல்லையிற்றன் - ௨௱எ.

மன்றலளகத்துக்கும்பாணைக்குமொப்பென்று - - *
கொன்றையுமுல்லையுங்கோத்தெறிந்து-வென்றி - ௨௱அ.

திரள்புருஷினுசையர்கோன்செங்கைக்கொடைபோல் - *
சுரபிதனையஞ்சத்துரந்து-குரவையிலே - ௨௱கூ.

மண்டுபொதுவியர்தமாமேகலைவாரிக் - - *
கொண்டுநெடுமால்போற்குருந்தேறித்-தண்டலையில் ௨௱௰.

காயாமலர்நிறக்காரணமென்னென்றுவிழச் - - *
சாயாமுறியாத்தமரித்துத்-தூயமலர் - - ௨௱௰௧:

வெண்படாத்தைக்களைந்துவேறுபடாஞ்சாத்துவர்போல் *
தண்படாவெண்படாஞ்சாத்திப்போய்-வண்பரணர் ௨௱௰௨.

நேரிழைவந்தாளென்றுநெய்பாறயிரான - - *
வாரியெதிர்கொள்ள வந்தவெனப்-பாரியெனும் - ௨௱௰௩.

சீரோன்வருணகுலாதித்தன்பானுகையிலே - - *
பாரோர்விருந்தருந்தும்பந்தியெனப்-பேராயர் - ௨௱௰௪.

பாடிதனினெய்ச்சாடிபாற்சாடிமிக்கதயிர்ச் - - *
சாடிநிமிடந்தனிற்சாடி-ஒடிக் - - - ௨௱௰௫.

கடுங்கானிடைநடந்துகலைப்பெண்ணூக்கி - - *
அடுங்காளவெம்பணியிலாடி-நெடுங்கோட்டு - ௨௱௰௬.

மாமருதஞ்சாய்த்துவணங்குவார்நெஞ்சுறைந்து - *
தாமமணியுஞ்சகடுதைத்து-பூமியெனும் - ௨௱௰௭.

மின்னையளந்துவிளங்கித்தலைநாளில் - - . - *
றன்னையும்பெற்றவிருதாள்வணங்கி-முன்னி - ௨௱௰௮.

மருதம்புகுந்துவனசம்புனைந்து - - - *
மருதங்களைந்துவளைந்து-கருதரிய - - ௨௱௰௯.

எம்பிரான்றேவியெழுந்தருளினளென்றே - - *
உம்பர்கோன்வைத்தவுப்பலபெனப்-பைம்பூகத் ௨௱௨௰.

தாறுமிளநீருந்தண் கரும்புமஞ்சளிஞ்சித் - - *
தேறுங்கருணைச்செழுங்கிழங்கும்-ஊறிரதத் - ௨௱௨௧.

தேமாநறுங்கனியுந்திண்பலாவின்கனியும் - - *
மாமாதளையின்வரர்கனியும்-ஆமலகப் - ௨௱௨௨.

பைங்கனியும்வாழைப்பசுங்கனியும்பேரொலுமிச் - *
சங்கனியும்பொற்றமரத்தங்கனியும்-தங்கமலர்ச் - ௨௱௨௩.

சோலைவாய்வண்டுவைத்தசுத்தப்பசுந்தேனும் - *
ஆலைவாய்க்கன்னலடுபாகும்-மாலதியும் - - ௨௱௨௪.

பன்னீருமல்லிகையும்பாளையும்பாதிரியும் - - *
மன்னுங்குவளைமதுமலரும்-இன்னவகை - ௨௱௨௫.

எல்லாம்பரவியிருந்தவிடந்தோறும் - - - *
உல்லாசமாகவுலாவிவந்து-மல்லாடத் - - ௨௱௨௬.

தூண்டுபரியேறுஞ்சுத்தவீராதிபர்போல் - - *
பூண்டுசிலைவாளெடுத்துப்போர்தாவி-ஈண்டு - - ௨௱௨௭.

கனையெங்குமள்ளர்களித்தார்க்கநன்னீர்த் - - *
திரையெங்குமன்னஞ்செறியப்-பரவியே - ௨௱௨௮.

நெய்தனிலம்புகுந்துநெய்தற்றடம்படிந்து - - *
மைதவழும்புன்னைவனஞ்சாய்த்துக்-கைதைமடல் ௨௱௨௯

சூடிப்புளினமெலாஞ்சுற்றிப்பெரும்பனையைச் - *
சாடிப்புளினந்தனையோட்டி-நீடுற்ற - - ௨௱௩௰.

மாதரங்கமுந்திவலைவாணரிளம்பருவ - - - *
மாதரங்கமுந்திவலைவாய்முகந்து-தாதவிழ்ந்து - ௨௱௩௧

பானலம்புனைந்துவரிபாய்மரஞ்சுழன்றுவிழ - *
மீனினங்கள்சிந்தியலைவீசிமொண்டு-கானலெங்கும் ௨௱௩௨.

ஓடிக்கழிக்கரையிலொக்கலைப்பெடைக்குருகை - *
மூடிச்சுழித்தலையின்மூழ்கப்போய்-நாடிக்கண் ௨௱௩௩..

டந்தவருணனடிவணங்கிக்காணிக்கை - - - *
சந்ததாரந்தனைப்புனைந்து-செந்தமிழ்க்கு - ௨௱௩௪

மாருதசெங்கைவருணகுலாதித்தனென்று
கூறுதவர்போற்குறைவுற்றுப்-பேறுன ௨௱௬௫.

சங்கந்திகழ்நாகைத்தாருவைச்சேராதவர்போல்
பங்கம்புனைந்துடயமெய்திப்-பொங்குதழாய்த் ௨௱௬௬.

தேம்பதுமநாபத்திருமால்போற்சங்கேந்திப்
பாம்பணையின்மேவிப்படியளந்து-மேம்படுசொற் ௨௱௬௭.

செய்பதமிழ்க்கோவைத்திறம்போற்றுறைபரந்த
வெய்யதிருக்கங்கைவியனதியோன்-ஐயனூர் ௨௱௬௮.

(நாடு.)

அச்சுதனூர்சங்கேந்தமலனூர்மன்மதனை
மெய்ச்சுதனாகப்படைத்தவேந்தனூர்-நச்சரவில் ௨௱௬௯.

கண்டுயில்வார்மூதண்டங்காத்தருள்வார்தேன்சொரியும்
வண்டுளவார்சீரங்கமாநகரும்-எண்டிசையோர் ௨௱௭௰.

வந்திக்குந்தென்குடந்தைமாநகருந்தேவரெல்லாம்
சிந்திக்குமாமகஞ்சேர்தீர்த்தமும்-முந்தவே ௨௱௭௧.

தைப்பூசமாடத்தகுமென்னவெண்ணீறு
மெய்ப்பூசச்சொன்னவிடைமருதும்-எப்போதும் ௨௱௭௨.

எத்துகின்றசுந்தரனோவிருளிற்றூதாய்
ஆத்திமுடியோன்சென்றவாரூரும்-வாய்த்த ௨௱௭௩.

திருப்பதிகளுள்ளவெலாஞ்சேவித்துச்செந்தேன்
மருப்பதியுந்தண்டலையுன்மன்னி-விருப்பமுடன் ௨௱௭௪.

வேந்தர்கிளைதழைக்கவேதாகமந்தழைக்க
ஆய்ந்தவணிகரறந்தழைக்க-எய்ந்த ௨௱௭௫.

உழவர்குலந்தழைக்கவுண்ணமிர்தமூறும்
விழவுந்திருநாள்விழாவும்-அழகாம் ௨௱௭௬.

மனுநெறியுஞ்செல்வமும்வண்டமிழ்பாராட்டும்
அனுதினமுந்தன்மாசனமும்-தினகரனூர் ௨௱௭௭.

திண்மைக்குலத்துதித்தசெம்பியர்கோமான்புரக்கும்
வண்மையுடைச்சோழவளநாடன்-பண்மருவும் ௨௱௭௮.

(நகர்.)

பாடலுநாடகசாலையும்பைந்தொடியார் - - - *
ஆடலுஞ்சூழ்கின்றவாலயமும்-நீடு - - ௨௱௪௯.

பணிக்கோபுரநிரையும்பைம்பொன்மதிலும் - - *
மணிக்கோபுரமேடைவைப்பும்-கணக்காயர் - ௨௱௫௰.

கூட்டமுமுத்தமிழின்கோதாட்டுநல்விருந்தின் - - *
தேட்டமும்பாராட்டுஞ்சீராட்டும்-கோட்டு - ௨௱௫௧.

வனசத்திரமுகப்புமாமறையோர்க்கெல்லாம் - - *
தினசத்திரமுதவுஞ்சிரும்-அனத்தின் - - ௨௱௫௨.

குலந்தாமரைமேற்குலாவுங்குளமும் - - - *
நலந்தான்மிகுத்தநதியும்-அலர்ந்த - - ௨௱௫௩.

அளகாபுரியுமமரேசனூரும் - - - - *
புளகாகச்செல்வம்பரித்து-வளமேவும் - ௨௱௫௪.

செந்நெலும்பூகமுந்தின்கரும்புஞ்சந்ததமும் - *
பன்னுவளநாகைப்பதியினான்-ஒன்னலரைச் - ௨௱௫௫.

(மாலை.)

சாடுகின்றவேல்வீரன்றன்மார்பனுதினமும் - - *
சூடுகின்றவாகைத்தொடையினான்-கூடலரைப் ௨௱௫௬.

பேயுங்கழுகும்பெருவிருந்துகொண்டாடப் - *
பாயுங்கவனப்பரியினான்-ஆயும் - - ௨௱௫௭.

(யானை.)

அருந்தமிழோர்சொற்படியேயாறுறுப்பும்பாரைப் - *
பொருந்திமதமூன்றும்பொழிந்து-திருந்தார் ௨௱௫௮.

படைக்கடலைத்தூளாக்கிப்பாகரைக்காய்ந்தோடி - *
நடைக்குமனவேகமெனநாடி-இடிக்கும் - ௨௱௫௯.

உருமேறெனமுழங்கியொன்பான்முழம்பெற் - *
றருமேகநீரையருந்தி-வருமேரு - - ௨௱௬௰.

என்னவரிவண்டினினந்தொடரக்கோபமே - - *
மன்னுமயிராவதத்தினான்-மன்னி - - ௨௱௬௧.

(கொடி.)

இலகுகடற்பாரிலெதிரில்லையென்றே - - - *
குலவுமகரக்கொடியான் - நிலைமைபெறும் - ௨௱௬௨.

(முரசம்.)

நகைவருவைசபமென்றேதன்முன்றிலிடை - - *
மோகஞ்செய்மூன்றுமுரசினன் - நாகமதி - ௨௱௬௩.

(ஆணை.)

சூடுகின்றசெய்யசடைச்சோதியாரம்பலத்துள் - *
ஆடுகின்றநாதர்திருவாணையான் - நீடும் - ௨௱௬௪.

கடலுக்கரசன்கனங்குழலார்நீட்டும் - - - *
மடலுக்கிசைந்தவடிவன் - அடலுக்குத் - - ௨௬௫.

தோற்றியவேல்வேந்தர்தொல்விருதெலாமிமைப்பில் *
மாற்றியவீரவடிவாளினன் - ஏற்றக் - - - ௨௬௬.

கொடியான்றனக்குக்குலக்கொடியைநல்கி - - *
வடியாப்புகழ்படைத்தவள்ளல் - படியாளும் - ௨௬௭.

கோமானெனவாழ்குருகுலத்தோர்கோத்திரத்தில் - *
மாமாலனையமனுதுங்கன் - பூமீது - - ௨௬௮.

மண்டலிகர்கொண்டாடுமானகுலசீலபரன் - *
தண்டமிழ்வல்லோர்கிளையைத்தாங்குவோன் - மண்டலத்தில்

தஞ்சமெனவந்தோரைத்தப்பாமலெப்பொழுதும் - *
அஞ்சலெனக்காக்குமபயத்தான் - கஞ்சத் - - ௨௭௰.

திருவளருமார்பன்றிருமலைராய - - - *
வருணகுலாதித்தமகிபன் - சுரபி - - - ௨௭௧.

அனையதிருப்பேரனவதியிடாத்தியாக - - - *
கனகவனசகரத்தான் - அனவரதம் - - - ௨௭௨.

கோனேரிராசவருணகுலாதித்தன் - - *
தானுபரணசயதுங்கன் - தேனூரும் - - ௨௭௩.

தாரான்கிளைதழைக்கத்தந்ததிருப்புதல்வன் - - *
வீராகரனைவேற்கரத்தான் - சீரார் - - ௨௭௪.

வருணகுலாதித்தனுக்குமைந்தனெனவாழ்வு - *
தருமபிராமன்கனகதாரு - திருமருவும் - - ௨௭௫.

வள்ளலனையகொடைமங்காமற்காத்தானுக் - - *
குள்ளதிருத்தலைமயனுத்துங்கன் - தெள்ளும் - - ௨௭௬.

இருமரபுந்துய்யானியலிசைகள்வல்லான் - - *
ஒருமொழியேசொல்லுமுதாரன் - பொருசமரில் ௨௭௭.

வாங்குசிலைவிசயன்மார்த்தாண்டன்வாளபிமன் - *
ஓங்குமடன்மாவொளிருதயன் - தீங்குநெறி - ௨௭௮.

சொல்லாதவாக்கினைக்குச்சுக்ரீவன்மூதண்ட - - *
வில்லாளன்வெண்ணீற்றுமேனியான் - சல்லாப - ௨௭௯

மாதரிருகண்ணுமனமுந்திறைகொள்ளும் - - *
பூதரவீரபுசத்தினன் - ஓதும் - - - ௨௮௰.

தரணிபரிபாலன்சமரமுகவீரன் - - - *
கருணைபரிமளிக்குங்கண்ணன் - பரவும் - - ௨௮௧.

அடுத்தவருக்காதாரனன்னசத்ரசோமன் - - *
கொடுத்துவழிகாட்டுங்குரிசில் - தொடுத்துவிடும் - ௨௮௨.

பூந்தாமரைமுதலைம்பூவாளியுங்கரும்பும் - - *
ஏந்தாதசெவ்வியெழிற்காமன் - மாந்தாதா - ௨௮௩.

ஆருந்தரிசித்தளவேயவரவர்தம் - - - *
பரம்பரையறியும்பண்பாளன் - தீரன் - - ௨௮௪.

அனகனபயனமலனசலன் - - - *
கனகசரணகமலன் - தினைவும் - - - ௨௮௫.

மதுரமொழியுமரபுமினிய - - - - *
சதுரவிரகசரசன் - அதுலன் - - - ௨௮௬.

இளமைவயதிலியலுமிசையும் - - - *
வளமைபுனையுமகிபன் - அளிகொள் - - ௨௮௭.

தருமமுரிமைதகுதிமிகுதி - - - *
அருமைவரிசையமைவு-பெருமை - - ௨௮௮.

உடையணிணியவுலகிலெவ்வரும் - - - - *
அடையவிழையுமழகன்-மடவிதழித் - - ௨௮௯.

தாமச்சடிலனம்புசாதசரணனன்று - - *
காமப்பயலையென்றகாளகண்டன்-சேமுற்று - ௨௯௰.

மாலைக்குழலிபங்கன் மாணைக்கையிலணிந்த - - *
கோலப்பரமனன்புகூர் தங்கன்-மேலிட்ட - ௨௯௧.

கோரக்கடினகும்பகோலத்ரிகடதுங்க - - *
வீரச்சமரதந்திமேலுதயன்-நேருற்ற - - ௨௯௨.

சற்புருஷீமருவரசர்க்குமணவாளனிறை - *
அற்புதசொரூபனகிலப்பிரியன்-நற்பதுமை - ௨௯௩.

ஒக்கவிளையாடுமனுத்தமகிர்பாசரிதன் - - *
மைக்கொடைகுலாவுமொருவச்ரதரன்-மிக்கதொரு ௨௯௪.

துட்டகுலகாலனொருசொற்கபடிலாநிருபன் - *
வட்டவுலகாளுமகிலப்ப்ரபலன்-கட்டளைசேர் - ௨௯௫.

வள்ளவிருபத்திரண்டாகமாநிலத்தோர் - - *
எள்ளரியசீமூதமெட்டாகத்-தெள்ளுதரு - - ௨௯௬.

ஆருகச்சங்கத்தாரைம்பதின்மராகமதி - - - *
வீருகவந்துதித்தவேல்வீரன்-பேரும் - ௨௯௭.

அருணனெறிசேகரத்தானச்சுதராய - - - *
வருணகுலாதித்தமகிபன்-கிரணமிகும் - - ௨௯௮.

கார்மதித்தநற்கொடையான்காதலுடனேசுக்ர -- *
பார்மதித்தநாகைப்பசுங்காவில்-ஏர்மதித்த - ௨௯௯.

(காட்சி.)

பொன்போன்மரகதம்போற்பூமயில்போல்வாளுலவு *
மின்போற்றாளவிளக்குப்போல்-என்போல்வார் - - ௩௱.

ஆருயிர்போற்றெய்வரம்பைபோலாவிசொளும் - - *
சூரின்மகளிர்சுவடுபோல்-சூரியவென் - - ௩௱௧.

கண்போற்கவுஸ்துவம்போற்காகோதரநாட்டில் - ※
பெண்போலொளிரும்ப்ரவாளம்போல் - நண்போதும் ௩௱௨.

சித்ரரூபிர்ப்பெற்றசெயல்போல்விசித்திரம்போல் - ※
அஸ்த்ரமதன்செங்கோலரசுபோல்-முத்திறமாய்த் ௩௱௩.

தோய்ந்ததமிழின்சுவைபோலரன்விழியால் - - ※
சாய்ந்தவரசுதழைக்கவே-ஆய்ந்துவரும் - ௩௱௪.

ஏந்திழைபோன்முக்கனிபோலின்னமுதுபோன்மதுரம் ※
சாய்ந்திநறுங்குழற்றேழ்தள்ளராடி-ஏந்தும் - ௩௱௫.

இரண்டுகுடம்போலுமிருதனத்தைத்தாங்கி - ※
மருங்குதுவண்டுவருந்த-நெருங்கிவந்து - - ௩௱௬.

நிற்பாரைக்கண்டுநெடிதுயிர்த்துத்தெய்வமே - - ※
இப்பாரில்வந்தவிவராரொன்று-பொற்பாமென் ௩௱௭.

னெஞ்சங்கலங்கிநினைவழியும்வேளையினில் - - ※
கஞ்சமலரடியுங்கண்ணிணையும்-தஞ்சமென - ௩௱௮.

அஞ்சல்புரியவதுதாவரமாக - - - ※
வஞ்சமறமகிழ்ந்துவாய்புதைத்து-விஞ்சலுறும் ௩௱௯.

தேனேமதனதிரவியமேசெங்கமல - - ※
மானேயனுராகவல்லியே-கானேறும் - - ௩௱௰.

கொந்தளகபந்திகுலைந்தாடக்குன்றிணிமிர் - - ※
சந்தளவுபாரஸ்தனமாட-உந்தியெழும் - - ௩௱௰௧.

வள்ளையிருதண்டின்மகரக்குழையாடப் - - ※
புள்ளணையவேற்கண்புரண்டாட-மெள்ள - ௩௱௰௨.

மருங்குலொசிந்தாடமணிவடங்களாட - - - ※
அருங்கமலமாமுகம்வேர்வாடப்-பெருங்கழங்கோ ௩௱௰௩.

டம்மனைபந்தாடியடியேன்மருண்டாட - - ※
இம்மனையிலாடுமியவிருக்கத்-தொம்மென்று - ௩௱௰௪.

வட்டத்திற்பாடிமணியூசலாடுவீர் - - ※
இட்டத்திலேயிருக்கவெண்ணீரோ-துட்டமத - ௩௱௰௫.

அம்புருமதுவிழியம்புமிகப்பொருதால் - - *
நம்புமடியேற்கேதுநன்னுதலே-கொம்பித் - ௩௱௰௬.

குயிலாளொடிதுகொதிக்குமதிக்கோடை - - *
வெயிலால்வெதும்பிவிடவோ-டயலார் - ௩௱௰௭.

உமதுகுழற்காவணத்தினுற்றநிழற்கீழ் - - *
அமையுமிடந்தந்தருளீர்-எமைமருவிக் - ௩௱௰௮.

கொங்கையானைக்கோட்டாற்குத்தாமற்கித்தசனூர் - *
வெங்கையானைக்கிடிதன்மேம்பாடோ-திங்கண்முகம்௩௱௰௯.

காட்டினீர்நானுமதுகண்டேன்மயல்பூட்டி - - *
வாட்டினீரென்னைமறஞ்செய்தீர்-காட்டுக் - ௩௨௰.

செறித்தநிலவாக்கினீரென்வசனமாயன் - - *
குறைத்தமராமானேன்கொடியேன்-மறித்தோர் - ௩௨௧

அருள்வசனங்கூறவதுமத்திப்பூவாமோர் - - *
மருள்வசனம்யான்மொழிதன்மாண்போ-பொருளை ௩௨௨.

மொழியீர்மொழிந்தால்வாய்முத்துதிருமோகற் - *
பழியீரதனாலணங்கே-செழியீர் - - ௩௨௩.

மதனுபதேசம்பண்ணிவாழ்விப்பீரொன்றன் - - *
விதனமெலாமாறிவிடவே-முதலாப் - - ௩௨௪.

பணிவாருக்காசைநெடும்பாம்புவிஷங்கொண்டால் - *
மணிவாய்மருந்துதவமாட்டீர்-தணியாத - ௩௨௫.

வல்லிரும்புகல்லுவயிரமொவ்வொன்றாக்கிளரும் - -*
புல்லிருந்துவீதிபுறப்படினும்-வல்லமையால் - ௩௨௬.

எப்படிசொன்னாலுமிளகாதுமதுமனம் - - *
மைப்படியுங்கூந்தன்மடந்தையே-இப்படியில் - ௩௨௭.

உன்னெஞ்சமென்னெஞ்சாயுற்றநடுநடுக்கும் - *
என்னெஞ்சமுன்னெஞ்சாயெய்தாதோ-முன்னம் ௩௨௮.

உடுக்கையிழந்தவன்கைபோலவாங்கே - - - *
இடுக்கண்களைவதாநட்பென்-றெடுத்ததிரு - - ௩௨௯.

வள்ளுவனார்சொன்னகுறள்வாராதோவந்தக்கால் - - *
எள்ளளவுநெஞ்சமிரங்காதோ-கள்ளமதன் - - ௩௩௰.

செங்கோலுமாக்கினையுஞ்செல்லுமோநீமுனிந்தால் - -*
பைங்கோகனகமுறுபாவையே-இங்கேதான். - - ௩௩௧.

தாதத்வஞ்சொன்னேனைத்தாங்கவோநீர்நினையீர் - — *
ஈதத்தவிர்ந்தநினைவின்பமோ-சீதளித்து - - ௩௩௨.

வாசமிலாக்காரும்வனம்விளைத்துத்தேய்பிறையும் - - *
பூசலிலதேற்குனியாப்பொற்சிலையும்-ஆசளவும் - - ௩௩௩.

தைத்துப்பிழைக்கறியாத்தண்ணளியிலாவேலும் - - *
வைத்தபயத்தினுறுவள்ளையும்-மொய்த்தநறை - - ௩௩௪.

கூடியமென்சிற்றிரங்கல்கொண்டறிகிலாக்குமிழும் - *
ஆடையமுறுதவாவாம்பலும்-வாடிக் - - -௩௩௫.

குவிந்தலருந்தாமரையுங்கோடுமுகச்சங்கும் - - *
அவிந்துவளைவெய்துமலையும்-சிவந்தகுறி - ௩௩௬.

காட்டவறியாதகாந்தளுங்குங்குமச்சே - - *
ரூட்டப்புளகித்தறியாத-ம்காட்டானைக் - - ௩௩௭.

கோடுமொருவழியிற்கூடாக்கரும்பாம்பும் - - *
பாடுகருதாதவடபத்திரமும்-ஆடவர்கள் - ௩௩௮.

தர்க்கமனம்வெருகித்தாஞ்சுழலவேநிலையாய் - - - *
நிற்கவறியாதநீர்ச்சுழியும்-விற்கோன் - - ௩௩௯.

நிலைப்பாடுமேவாதநேரிழையுமுன்பு - - *
செலப்பாகனாயுடையதேரும்-கொலைக்குரிய - ௩௱௪௰.

வாழையுங்காணுவளையில்விழுசெண்டும் - - *
தாழும்வராலுஞ்சரிகுறையில்-வீழும் - ௩௪௧.

தராசுமடிபட்டுத்தளர்பந்துஞ்செம்மை - *
இராதவியற்கூர்மத்தெழிலும்-பராமரித்தே - ௩௪௨.

புத்துபதியும்பலவடுவாய்க்காயாமல் - - *
மத்தியதனில்வந்துதவுமார்தளிரும்-மொய்த்துமலர் - ௩௪௩.

நீண்டகுழனெற்றிநெறிபுருவங்கண்காது - - *
காண்டகைபநாசிவாய்கந்தரந்தோள்-பூண்டகரம் - ௯௪௪.

கொங்கையுரோமங்குளிருதரமுந்தியிடை . - - *
தங்குநிதம்பங்கவான்றண்முழந்தாள்-துங்கக் - - ௯௪௫.

கணைக்கால்பரடுகுதிங்கால்புறந்தாளின்பம் - - *
கணிக்குமெழிலுள்ளங்கால்கட்கே-இணக்கிப் - ௯௪௬.

பெரியோர்களெல்லாரும்பேசுமருள்போல் - - *
சரியோதவென்றந்தருமோ-அரிவையே - ௯௪௭.

ஓடாதமானேயுமையாதசெம்பொன்னே - - *
வாடாதபூவேமரகதமே-தேடக் - - ௯௪௮.

கிடையாதபஞ்சவனக்கிள்ளையேகோது - *
படையாதபுல்லகண்டபாகே-நடையாடும் - ௯௪௯

சித்திரமேகாமன்திரவியமேமோகநற்ச - - *
முத்திரமேகட்டாணிமுத்தமே-அஸ்திரவேள் - ௯௫௰.

ஆகமமேவாழ்வேயரசேயுதிமதர . - - *
போகமேயான்செய்தபுண்ணியமே-போகினியே ௯௫௧.

கண்ணேவிரகக்கருலமேயமுதப் - - *
பெண்ணேகவிப்ப்ரதாபமே-ஒண்ணுதலே - ௯௫௨.

கேகயமேயென்றென்றுநேர்த்திப்பேன்வாழவுநு - *
நாகதியாகந்தந்தாலாகாதோ-வேகமதன் - - ௯௫௩.

காவிக்கணையுங்கருப்புவில்லுநீர்தந்தால் - - *
சேவித்துலகையன்றிச்சேரோனோ-பூவுலகில் - ௯௫௪.

சொன்மருவுநின்கொங்கைத்தர்க்கத்திலென்னைவைத்தால் *
மன்மதனூர்கொல்லக்சமாவேனோ-பொன்மயில்போல்

நிற்றமானேநீர்நிலமேலேநின்றபதம் - - *
கன்றிறலென்னுவிகன்றுதோ-ஒன்றியமை - ௯௫௬.

மாத்திரையின்பமகிழ்ந்தெனக்குப்பாலித்தென் - *
கோத்திரமெல்லாமடிமைகொண்டருளீர்-பூத்திகழும்௯௫௭

தேனேபிறக்குஞ்சென்னமெல்லாம்யானடிமை - *
தானேயென்மேற்றிருக்கண்சாத்துவீர்-மானனையீர் ௩௫௮

காத்தானைமார்பிற்கமலாசனத்திருவைச் - - *
சேர்த்தவருணகுலாதித்தனைச்சென்-றேத்தி - ௩௫௯

மகராசனென்றுரைக்கமாட்டாதார்செல்வம் - - *
நிகராமோவாலிபத்தினேர்தான்-இகலாகி - ௩௬௰

மோனமேபண்ணிமுனிந்திருந்தால்வீணிலே - *
போனநாண்மீண்டுவரப்போகுமோ-தேனனையீர் ௩௬௧

மாகோபமுண்டேலென்மார்மீதுந்தோண்மீதும் - *
ஓகோதாள்கொண்டுதைக்கவொண்ணாதோ-கோகிலத்தில்.

மன்றானைவைத்தாலும்வையுமினியுமானை - - *
என்றானைகோபமெனக்கில்லை மின்னனையீர் - ௩௬௩.

நற்றிக்கண்ணேறுகொண்டநற்கனிவாயூறலிலே - *
சற்றுத்தொட்டுத்தெறித்தாற்றாழ்வாமோ-பொற்கொடியீர்.

செரீர்பவரேத்திருவாய்மலர்ந்தொருசொல் - - *
தாரீரொன்றன்னைத்தனிப்பாரீர்-வாரீரொன் - ௩௬௫.

றுள்ளமிளகியுருகுகின்றவென்னளவில் - - *
எள்ளளவுநெஞ்சமிரங்காமல்-மெள்ளவே - ௩௬௬.

இத்தனைநேரந்தனியேயானுரைக்கும்விண்ணப்பம் *
அத்தனையுங்கேட்டுங்கேளாதவர்போல்-கொத்துமலர் ௩௬௭.

சூட்டுசிலைமாரன்பொரநிற்கிறானென்று - - *
காட்டுதல்போற்சற்றேகடைக்கணித்துக்-கேட்டுமிக ௩௬௮.

வின்முறுவல்செய்துவிளையாடித்தம்மிலே - *
புன்முறுவல்செய்தருளிப்போயினார்-மன்மதனும் ௩௬௯.

வெங்காதல்பூணும்வெகுராசசநடையும் - - *
சிங்காரப்பின்னழகுஞ்சேவித்தேன்-மங்கைநல்லார். ௩௭௰.

மண்ணிலேதோயவடிவைத்தசுவடத்தனையும் - *
கண்ணிலேயொற்றியொற்றிக்காமுற்றேன்-ஒண்ணுதலார்,

நின்றநிலையுநெறித்தபுருவக்கடையும் - - - *
மன்றலளகஞ்செறிந்தமாலையும்-பொன்றவெணைப் - ௩௭௨.

பார்த்தபார்வைக்குட்பசப்பும்பசுந்தோளில் - *
போர்த்தபோர்வைக்கடங்காப்பூண்முலையும்-சீர்த்தவளா ௩௭௩

வாட்டுகின்றசெந்தாமரைமுகமுங்கஸ்தூரிக் - — *
கோட்டுநுதலிற்குறுவேர்வும்-தோட்டுமலர்ப் - ௩௭௪.

பூங்காவில்வந்தபுதுமையுமென்கண்ணைவிட்டு - *
நீங்காமலுள்ளறிவுநீங்கினேன்-ஓங்குதுயர் - ௩௭௫.

கொண்டேன்வினையேன்கொடியிடமாய்வந்தபலன் - *
கண்டேனிதயங்கலங்கினேன்-அண்டியெதிர் - ௩௭௬.

காணத்தவஞ்செய்தகண்போன்மற்றைம்பொறியும் - *
பேணத்தவஞ்செய்யப்பெற்றிலேன்-நாணழகு - ௩௭௭.

குன்றினேனுண்மைகுலைந்தேன்றுணையிழந்த - *
அன்றில்போல்வாடினேனவ்வளவில்-ஒன்றறியாப் - ௩௭௮.

பித்தனிவனென்றெனக்கோர்பேருண்டேயாதலினால் - *
நித்தனிவனென்றுநினைவுற்றுச்-சித்தசன்றான் - ௩௭௯.

தண்டாநுதல்விழியாற்றான்பட்டகண்கலக்கம் - *
உண்டானவெல்லாமுளத்தெண்ணித்-தெண்டிரைசூழ் ௩௮௰.

துங்கவுலகிற்சுரும்பையெல்லாநாணாக்கிச் - - *
செங்கரும்பையெல்லாஞ்சிலையாக்கி-வெங்கலக - ௩௮௧.

மாகவனத்தோடேவளருமசோகமெல்லாம் - - *
சோகவனமாகத்துணர்பறித்துச்-சேகரித்து - ௩௮௨.

முல்லையெனும்பேரின்முழக்கிசையும்பூமியும்விட் - *
டெல்லையிற்பூவெல்லாமெடுத்தேந்தித்-தொல்லையனுக் ௩௮௩.

குந்திக்கமலமலரொன்றளித்துச்செந்திருவை - *
வந்திக்குநாகையர்கோன்மார்பிருத்திச்-சந்திக்கும் ௩௮௪.

கோகனகமுள்ளவெலாங்கொய்திரநிகண்போல்வ - *
ஆகுமலர்மாவினலர்பறித்து-வாகையிற்போர் - ௩௮௫.

ஆடிவிசயம்புனையவம்பாக்கித்தானனந்த - - *
கோடியுறுருபங்கொண்டெய்தி-நீடுலகில் - ௩௮௬.

ஒப்புருப்பாவியுடலந்தனைத்தனக்கோர் - - *
அப்பருத்துணிநிகராக்கினான்-மெய்ப்படவே - ௩௮௭.

நொந்தேன்பரதவித்தேனோக்கினகாமாக்கினியால் - *
வெந்தேனுள்ளாவிவெதும்பினேன்-நைந்தேன் - ௩௮௮.

விழுந்தேனயர்ந்தேன்மெலிந்தேனினைவும் - - *
அழிந்தேன்பரவசமேயானேன்-செழுங்கபட - ௩௮௯.

நெஞ்சிற்கருணையில்லாநிஷ்டூரியார்தம்மை - - *
வஞ்சக்கனவில்வரக்கண்டேன்-செஞ்சிலம்பு - ௩௯௰.

கொண்டவிருதாண்மலனாக்கும்பிட்டேன்வெய்யோனைக் *
கண்டகமலம்போற்களிகூர்ந்தேன்-தெண்டிரைசூழ் ௩௯௧.

நீதியுலகந்தனிலேநிக்ஷேபங்கண்டெடுத்த - - *
ஆதுலர்போற்பேருவகையாயினேன்-தீதினெறி - ௩௯௨.

சேரும்வருணகுலாதித்தனையேசேர்ந்துகளி - - *
கூருமவர்போற்குறைவற்றேன்-ஆரத்தின் - ௩௯௩.

வண்டலணிகொங்கைகளைவாழ்த்தினேன்மங்கைநல்லார் *
கெண்டையிணைவிழியைக்கீர்த்தித்தேன்-அண்டையிலே

சென்றேன்பராமுகமோதேவரீர்விண்ணப்பம் - *
ஒன்றேயதுகேட்கவொண்ணாதோ-இன்றுலைமநான் ௩௯௫.

சற்றேயொருவார்த்தைசம்பாஷித்துக்கொள்ளப் - *
பற்றேனோசொல்லீர்பனிமொழியீர்-பொற்றொடியீர் ௩௯௬

எந்நேரமுமேநீரோவினதுகேட்டுமது - - *
பின்னேதிரிந்துபிழையேனோ-என்னுடைய - ௩௯௭.

மேதகையநெஞ்சின்விழிவேல்விளைத்துவரும் - *
காதனிறைக்குங்களஞ்சியமே-சூதுபயில் - ௩௯௮.

சேலிலகுகண்ணீரோசெப்பீர்முக்காற்சமர்த்துக் - *
காவெளிமைவேண்டாவோகாரிகையீர்-ஏலமலர் - ௩௯௯.

எரிலங்குபூங்குழலீரொன்னருமையென்பெருமை - *
ஆரறிவார்நீரறிவதல்லாமல்-நீளாத் - - ௪௱.

தெளித்தாலுமாறுச்செழுங்காமச்செந்தீ - - *
அளித்தால்வலக்காரமாமோ-களிக்கும் - - ௪௱௧.

தவலோகருமயங்குந்தாமரநகையீர் - - - *
துவலோதுவலொன்றுஞ்சொல்லீர்-நவமாம் - ௪௱௨.

விழிபாயவேநொந்தேன்மெல்லநல்லீருந்திச் - - *
சுழிபாய்வேனென்றுதுதிசொன்னேன்-தழுவும் - ௪௱௩.

பொருவாள்விழியாரப்போதுமுகம்பார்த்துத் - *
திருவாய்மலர்ந்துநகைசெய்தார்-பெரிதிங் - ௪௱௪.

கிதுவேதருணமெனவெண்ணியிடந்தேடி - - *
மதுவேறுபூங்காவனத்தில்-உதவியதோர் - ௪௱௫.

வாளைமணிவசந்தமண்டபத்திற்பூங்கமுகின் - - *
பாளைமணங்கமழும்பந்தரிட்டு-நீள - - ௪௱௬.

எடுத்துவகைவகையாவெல்லையில்லாமாலை - - *
தொடுத்துச்சிலபூச்சொரிந்து-விடுத்ததிலே - ௪௱௭.

பாயல்படுத்துப்பரிமளப்பூமெத்தையின்மேல் - *
ஆயவிரித்ததன்மேலாங்கவளைச்-சேயபதம் - ௪௱௮.

கன்றுமற்கொண்டேற்றிக்கைகட்டிவாய்புதைத்து - *
நின்றேனிருதாளைநீட்டினூர்-சென்றந்தக் - ௪௱௯.

கால்கொண்டுபற்றியிருகையாரத்தீண்டியணை - *
மேல்கொண்டுநானுமங்குமேவினேன்-மால்கொண்ட ௪௱௰.

மைக்குழலைநீவிவகிர்ந்துவகிர்ந்ததிலே - - *
தக்கமதுமாலையெலாஞ்சாத்தினேன்-மிக்கபனி - ௪௱௰௧

நீரிற்குழைத்தநிறக்குங்குமக்குழம்பைப் - - *
பூரித்தகொங்கைக்ளித்பூசினேன்-வேரிமல - ௪௱௰௨.

ரிற்பூவையன்னார்க்கிதவியகாய்ச்சுண்டையுடன் - *
கர்ப்பூரதாம்பூலங்கைகொடுத்தேன்-அற்புதமாம் ௪௱௰௩.

பாதிச்சுருளெனக்குப்பாவித்தமிர்தநிலை - - *
சோறிக்கலிலைதொடங்கினார்-சீதமலர் - - ௪௱௰௪.

மட்டிலேலதோய்குழலார்மாமேகலைநெகிழ்த்த - *
மட்டிலேயென்னைமறந்தேன்யான்—கட்டிமலர்க் - ௪௱௰௫.

கைக்குளணைத்துக்கரணக்கட்டளைவட்டத்துறையிற் - *
புக்கொருமித்தெட்டுவகைப்புட்குரலிட்-டொக்கவெடுத்

தப்புறமுற்றிப்புறமுற்றற்புவிளைத்துப்பரிவைச் - *
செப்பிநகத்திற்குறியைச்சிக்கெனவைத்-தொப்பிலெழிற்

பற்குறியிட்டுக்கருணைப்பத்மமுகப்பொற்பொளிரப் - *
பொற்குவடொத்தப்புணரப்புத்தமிர்தத்-திற்குலவிச்

சற்றிளகிச்சற்றிறுகிச்சக்ரத்தலத்துக்குளிலக் - - *
கற்றுமதர்த்தொத்ததனக்கச்சவிழப்-பொற்பு - ௪௱௰௬.

மிருத்தமுலைக்கண்விரற்கொடதுக்கி - - - *
நகத்தினுறுத்திநகைத்து-முகத்தை - - ௪௨௰.

முகத்திலமுத்திமுயக்கிமயக்கி - - - - *
மிருத்தநலத்தைவிளைத்துச்-சுகத்தில் - - ௪௨௧.

அரத்தநிகர்த்ததரத்தையெயிற்றில் - - - *
இருத்தியருத்தியிசைத்துக்-கருத்திலிசை - ௪௨௨.

உற்றகரணத்திலொருவர்க்கொருவரொத்துவகை - *
பெற்றதிலடிக்கடிபிணக்குவர-நற்றுயிலில் - ௪௨௩.

மைத்திலகநெற்றிபுருவக்கடைநெறிப்புவர - - *
உய்த்திடுகழுத்தொடுகையுட்புகுத-மெத்திய - ௪௨௪.

கொத்தளபந்திகுலைந்துசரிந்திட - - - *
வந்துசுரும்பரவஞ்செய-முந்திய - - ௪௨௫.

செஞ்சரணங்கள்சிலம்புபுலம்பிட - - - *
வஞ்சிமருங்குல்வளைந்திட-அஞ்சொலுடன் - ௪௨௬.

நெஞ்சமுமொன்றிநிரம்பியசங்கிசை - - - *
கொஞ்சவிரண்டுகைகும்பிட-விஞ்சிய - - ௪௨௭.

ஆவியொன்றவாகமொன்றவாசையொன்றநேசமொன்ற - *
மேவுபஞ்சபாணதங்கன்வீற்றடங்க-லாவுமின்ப - ௪௨௮.

மேலணிந்தபூண்மழுங்கமேனியெங்கும்வேர்வரும்ப - - *
நீலமன்றல்வீசுமுந்திநீர்ததும்பக்-கோலமிகும் - - ௪௨௯.

மொய்யகலமேலிட்டமுத்துவடஞ்சிதறத் - - - *
துய்யதிருமேனிதுவட்சிதர-மெய்யுறநான் - - ௪௩௰.

ஆரமதனாலிலறிந்தறியாச்சந்தேகம் - - - *
சேரவடைவேதெளிவித்துக்-காரிகையார் - - ௪௩௧.

தந்தவனுராகசம்போகங்கொண்டார்டி - - - *
இந்த்ரபதம்பெற்றவர்போலின்புற்றுச்-சிந்தை - - ௪௩௨.

தனைவென்றவாட்கண்டருங்கனவைக்காம - - - *
வினையென்றறியேன்விழித்தேன்-நனைகமழும் - - ௪௩௩.

சோலையெல்லாந்தேடினேன்சுற்றினேன்காணாமல் - - *
மாலையெல்லாங்கொண்டுவருந்தினேன்-பாலனையார் - ௪௩௪.

அப்போதுசென்றவடியல்லாமற்பார்த்தளவில் - - - *
இப்போதுசென்றவடியான்காணேன்-மெய்ப்படநான் ௪௩௫

காணவேமுந்திக்கனவென்றறிந்தக்கால் - - - *
வீணிலேயோடிவிழிப்பேனோ-பேணி - - ௪௩௬.

அறிவுக்கினியாரகலாமற்கையால் - - - - *
இறுகத்தழுவியிரேனோ-நறுநுதலார் - - - ௪௩௭.

சீரமுதக்கொங்கையையென்செவ்வாயினாற்பற்றி - - *
ஆரமுதமுண்டுபராக்காகேனோ-காரிகையார் - ௪௩௮.

எயத்தனியேயெழுந்தருளவின்னமந்த - - - *
மாயத்துயிலெனக்குவாராதோ-நேயமுடன் - - ௪௩௯.

மெத்தெனவேநீங்கிவிழித்ததுவும்பேசுவதும் - - - *
இத்தனையுமோகனவென்றியானறியேன்-சத்தியமே ௪௪௰.

என்றுவருந்தியெரியுங்கனல்வாயில் - - - - *
ஒன்றுமெழுகாயுருகினேன்-மன்றலணி - - ௪௪௧.

பாயலிலேசற்றேபரிசித்தமாத்திரத்தில் - - - - *
ஆயிரநாள்கூடினர்போலாயினேன்-சேயிழையார் - ௪௪௨.

அன்பும்பெருநலமுமந்தரங்கமும்பெருக - - - *
இன்பம்பெரிதாயிருந்ததுவும்-துன்பம் - - ௪௪௩.

அனைத்துந்தவிர்ப்பவர்போலாட்கொண்டதுவும் - - *
நினைத்துநெடுமூச்செறிந்துநின்றேன்-வினைக்கலகக் ௪௪௪.

கோபமதனாலேகுறையுயிருங்கொள்ளைகொள்ளும் - - *
சாபமதனாலேதயங்கினேன்-சோபமனத் ௪௪௫.

தொந்தமதியாற்றொடர்ந்துபோதாக்குறைக்கு - - - *
வந்தமதிகர்யமதியழிந்தேன்-சந்ததமும் - - ௪௪௬.

அண்டர்குலமறத்தமரமானேனடல்வேழம் - - - *
உண்டவிளங்கனிபோலுள்ளுடைந்தேன்-அண்டிவரும் ௪௪௭.

தேவாடையாலேதியங்கினேன்பார்மடந்தை - - - *
மாவாடையாலேமயங்கினேன்-காவில் - - ௪௪௮

செழுந்தென்றலூடாடச்செந்தீவடவைக் - - - - *
கொழுந்தென்றலாலேகுறைந்தேன்-தொழுந்தகைய-௪௪௯.

காளகண்டவாள்விழியார்கட்டுரைகேளாச்செவியிற் - *
காளகண்டவோசைபுகக்கன்றினேன்-மேளமிகும் - ௪௫௰.

தந்திமருப்பென்னுந்தடமுலையார்காரளக - - *
பந்திமழைகாணப்பயிரானேன்-முந்தியருள் - - ௪௫௧.

தாவிப்பொழியுமுகச்சந்திரோதயங்காணு - - - *
வாவிக்குமுதமலரானேன்-பாவியேன் - - ௪௫௨.

புண்ணுளநெஞ்சுதனிற்பொங்காரம்விட்டாரக் - *
கண்ணிலொருவரையுங்காண்கிலேன்-எண்ணில் - - ௪௫௩.

விரகாதிமோகவிளைவாங்கடலின் - - - *
கரையேறுகின்றவழிகாணேன்-உருகிமனம் - - ௪௫௪.

பேராசைகொண்டேன்பிழைக்கும்பொருட்டாகச் - *
சோராதொருநினைவுதோன்றிற்று-நேராகக் - - ௪௫௫.

காமமுழந்துகலங்கிவருந்தினுர்க் - - - - *
கேமமடலல்லதில்லைவலி - ஆமெனவே - - - - ௪௫௬.

சொன்னதிருவள்ளுவனாத்தோத்திரஞ்செய்தேன்கருத்தில் - *
உன்னிமடலூர்தற்கொருமித்தேன் - வன்னநறுந் - ௪௫௭.

தாதளவுஞ்செய்யவிதழ்த்தாமரைப்பூங்கண்ணனைக் - - *
காதளவுந்தாவடிபோங்கண்ணாச் - சீதமுல்லைச் - ௪௫௮.

சூதாரையெல்லையற்றசூதாவள்ளையெனுங் - - *
காதாரைச்சற்றுமிரங்காதாரைப் - போதாகம் - ௪௫௯.

செய்யாரைமிக்கமறஞ்செய்தாரைக்காந்தளெனுங் - - *
கையாரையென்னவிற்கைத்தாரை - வெய்யமயல் - ௪௬௰.

தந்தாரைப்பூங்குழலின்றாராமாலளிக்க - - *
வந்தாரைக்கொங்கையின்மேல்வாராரை - சிந்தைவெறுங் ௪௬௧.

கல்லாரைமன்மதனுல்கற்றாரைமைப்புருவ - - *
வில்லாரையேழுலகம்விற்பாரை - நல்லபடந் - - ௪௬௨.

தன்னிலவர்வன்னெஞ்சந்தானெழியமங்கைநல்லா - - *
ரென்னும்படிவமெடுத்தெழுதிப் - பின்னர் - ௪௬௩.

சடைகட்டிவெண்ணீறுசாத்திநரம்பூனத் - - - *
தொடைகட்டிவெள்ளெருக்குச்சூடி - உடல்கருக - - ௪௬௪.

நெஞ்சசரவன்றெரித்தநித்தனிவனென்றுமலர்ப் - - - *
பஞ்சசரவேளும்பயப்படவே - விஞ்சமுதச் - - ௪௬௫.

செம்பவளவாயார்திருவேளைக்காரனென - - *
அம்பொனெடுங்காகளங்களார்ப்பவே - கும்பமுனி ௪௬௬.

சொற்றகைமையால்விளங்குந்தொல்காப்பியந்தெளிந்தே *
உற்றபெரியோர்நாற்பத்தொன்பதின்மர் - நற்றமிழ்நூல் ௪௬௭

சேரும்வருணகுலாதித்தன்செழுங்கனகத் - - - *
தாருவெனுங்கோனேரிராசனருள் - பேரறஞ்சேர் - ௪௬௮.

ஆஸ்தானபோசனனங்கவேளைத்தாந்தோன் - - - *
நாத்தானிரண்டுளாயாநாகரிகன் - காத்தான் - - ௪௬௯.

அருணமலர்மாதுபுணரச்சுதராய - - - ❊
வருணகுலாதித்தன்மகிழ்த்-தருணமயல் - - சஎ௰.

நீர்வேன்பலர்காணத்தெனருகவீதியிற்சென் - - - ❊
றூர்வேன்பனைமாவுகந்து. - - - - - - சஎக.

ஆ கண்ணி - சாஎ௰க.

---

வருணகுலாதித்தன்மடல்-முற்றுப்பெற்றது.

☞ சென்னபட்டணத்தைச்சார்ந்த ஒட்டேரிக்குசப்பேட்டையில் - தி - விசாகப்பெருமாளையரது - கல்விவிளக்கவச்சுக்கூடத்தில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

---